[திரு. வி. தம்புசாமி] [1990 மார்ச் 30

வழங்கி அந்நகராட்சியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒவ்வொரு மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து பேசி முடிவு எடுக்க இருக்கிறோம். அதற்கான தேதி கூட நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது கருத்துக்களைத் தெரிவித்தால் அது குறித்து ஆலோசித்து முடிவுகளை எடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 41-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989–90 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of Art. 205 Clause 2 read with Article 203 clause 3 of the Constitution of India, I, P.C. Alexander, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for Further Grants for the year 1989–90."

6. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1989-90—பொது விவாதம் மற்றும் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90—பொது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. எல். கணேசன்: முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலாளர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: